காப்புக் கொடுக்கவேண்டும். அந்தப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டால் இந்தக் குறை வந்திருக்காது. ஆகவே, இந்த வேலை நிறுத்தத்தைக் கைவிடுவதற்கான நிலையிலே அரசு சரியான உதவியைக் கொடுக்காமலிருப்பதால்தான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை வற்புறுத்த வேண்டி இருக்கிறது.

மெடிக்கல் காலேஜிலே இருக்கக் கூடிய பி.பார்மசி மாணவர்கள் எந்த முறையில் பயிற்சி அளிக்கப்படுகிறார்கள் என்ற விவரத்தையும் எந்த முறையிலே அவர்கள் வேலையிலே சேர்க்கப்படுகிறார்கள் என்ற விவரத்தையும் சபைக்குத் தெரியப்படுத்த உதவிகரமாக இருக்கும் என்ற முறையிலேதான் இந்த அவையை ஒத்திவைத்து இதை விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*** மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள், மருத்துவக் கல்லூரியிலே உள்ள மருந்து கலப்பாளர் பிரிவில் பட்டம் பெறுவதற்குப் பயிற்சி பெறுகிற மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்வது காரணமாக அந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்க இந்த அவையை ஒத்திவைக்கவேண்டுமென்று ஒரு தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிறார்கள்.

ஒரு உண்மையை அவர்கள் உணரவில்லையென்று நான் கருதுகிறேன். அமைச்சரே உறுதிமொழி கொடுத்தார் என்று அவர் தெரிவித்தார். இது வரையிலே உறுதிமொழி என்று எந்த ஒரு மொழியும் நான் அவர்களுக்குச் சொன்னதில்லை. ஆனால் எந்த ஒரு பிரச்சினையை மாணவர்கள் என்னிடத்திலே கொண்டு வந்தாலும் அதுபற்றி விரிவாகப் பரிசீலிக்கப்படும், ஆராயப்படும் என்று தெரிவித்திருக்கிறேன்.

அனுதாபத்தோடு பரிசீலிக்கவேண்டுமென்று அவர் சொன்னதைப் பொறுத்தவரையில் இந்தக் கழக அரசைப் பொறுத்தவரையில், எந்த ஒரு பிரச்சினையிலும் எந்த அளவுக்கு அரசால் முடியும், அல்லது தனியார் துறையாலே முடியும் என்றாலும் அதற்கு எந்த அளவுக்கு உதவமுடியும் என்று எண்ணிப் பார்க்கிற காரணத்தால், பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்தேன். பரிசீலிக்கப்படும் என்று சொன்னது 'அஷ்யூரன்சாகிவிடும்' என்று சொன்னால், இனி என்ன சொன்னாலும், பரிசீலிக்க முடியாது என்று சொல்லவேண்டிய துர்ப்பாக்கியமான நிலை ஏற்படும்.

சில மாதங்களுக்கு முன்னால் இந்த மாணவர்களுக்குப் போதுமான அளவுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கவில்லையென்று என்னிடத்திலே தெரிவித்த பொழுது, அடுத்த ஆண்டில் அதிக மாணவர்களை சேர்க்காமலிருக்க ஒரு

1973 பிப்ரவரி 13] *[திரு. க. அன்பழகன்]*

முயற்சி இந்தத் துறையிலே நடைபெற்றது. அந்த முறையிலே சென்னையிலே இருக்கிற தலைமை பொது மருத்துவ மனையை ஒட்டிய கல்லூரியில் பார்மசி வகுப்பு நடத்தப்படுவது, அந்தக் கல்லூரியினுடைய வளர்ச்சிக்கு அதை பி.ஜி. இன்ஸ்ட்டியூட்டாக உயர்த்துவதற்கு ஏற்றதாக இல்லையென்ற காரணத்தால் அந்த வகுப்பை வருகிற ஆண்டிலிருந்து நிறுத்தலாம் என்று ஆலோசித்த பொழுது, அதே மாணவர்கள்—டாக்டர் ஹாண்டே அவர்களுக்குத் தெரியும் —அந்த வகுப்பை நீங்கள் நிறுத்தக் கூடாது, நிறுத்தினால் நாங்கள் ஸ்டிரைக் செய்யவேண்டி இருக்கும், அடுத்த ஆண்டும் மாணவர்களைச் சேர்க்கவேண்டும். இட வசதி இல்லையென்று சொன்னால், கீழ்ப்பாக்கத்திலே உள்ள மருத்துவக் கல்லூரியில் வைத்துக்கொள்ளலாம் என்று மாணவர்கள் கேட்டதன் காரணமாக அதற்கு இசைந்தோம். ஒரு பக்கம் மாணவர்கள் வகுப்பை நடத்த வேண்டும் என்கிறார்கள். இன்னொரு பக்கம் அங்கு படித்து வருகிற அனைவருக்கும் வேலை தரவேண்டும் என்கிறார்கள். இல்லையானால் படிப்பதை நாங்கள் நிறுத்துவோம் என்கிறார்கள். அரசாங்கம் படிப்பை நிறுத்தக் கூடாது. படிக்கிற அனைவருக்கும் கட்டாயம் வேலை கொடுக்கவேண்டுமென்று கோரு கிறார்கள். இப்படிப்பட்ட முரண்பட்ட வேண்டுகோளினை ஒட்டி டாக்டர் ஹாண்டே அவர்களும் தங்கமணி அவர்களும் அதிக அக்கறையோடு விஷயங் களைத் தெரிவித்தார்கள். மேலும் சில பாடத்துறைகளில் Non-medical post-graduate course படித்தவர்களுக்குப் போதுமான வேலைவாய்ப்பு இல்லையென்றநிலையினால் சிலகாலத்திற்கு அந்தப் படிப்பு நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல்தான் இங்கேயும் இதைப் படிக்கிற வர்களுக்குப் போதுமான வேலைவாய்ப்பு இல்லையென்று வருமோ என்று எண்ணிக்கை குறைக்கப்படுகிறது. ஆகவே அதே முறையிலேதான் இதையும் குறைக்கலாம் என்ற ஆலோசனை நடத்தினோம்.

அடுத்து, ஏற்கனவே இந்த மாணவர்கள் தங்களுடைய வேண்டுகோளைத் தெரிவித்தபொழுது அரசாங்கம் விரிவாகப் பரிசிலனை செய்திருக்கிறது. அப்படி நடவடிக்கை எடுக்கிற நேரத்தில் குறைக்கிற ஆலோசனையையும் எதிர்ப்பது எப்படி நியாயமாகும்?

Pharmacy graduates alone to be appointed in Pharmacy departments of Government. என்ற முறையிலே ஒரு வேண்டுகோளைத் தெரிவித்து இருக்கிறார்கள். அதற்காக நான் விளக்கம் சொல்ல விரும்பு கிறேன்.

. . . .

" The absorption of Pharmacy graduates alone in pharmaceutical industries in public sector like B.C.G. Laboartory, Guindy, Cinchona Department, Naduvattam, and Pasteur Institute, Coonoor